# இந்தியா பெந்தெகொஸ்தே தேவசபை
# THE INDIA PENTECOSTAL CHURCH OF GOD
[Reg. 1935 Eluru (A.P) Under Society Act XXI of 1860. Reg. No. 9/1935-36]
## தமிழ்நாடு | TAMIL NADU



**Pr. Dr. KINGSLY CHELLAN**
PRESIDENT
PHONE : +91 94882 74557
ADDR : 27/6B BETHANY, MARTHANDAM KANYAKUMARI DISTRICT, TAMILNADU INDIA - 629 165

**Pr. C. SUNDARRAJ JOHNSON**
VICE PRESIDENT
PHONE : +91 94444 71684
ADDR : NO.44/18, V.P.N. COLONY MAINROAD KANNIGAPURAM, CHENNAI, TAMILNADU, INDIA - 600 012

**Pr. S. SOLOMON**
SECRETARY
PHONE : +91 94431 95225
ADDR : CHENTHARAVILAI, ATTOOR, KANYAKUMARI DISTRICT, TAMILNADU INDIA - 629 177

**Pr. JOY ARULRAJ**
JOINT SECRETARY
PHONE : +91 98945 66854
ADDR : ASARIPALLAM, PERVILAI PO NAGERCOIL, KANYAKUMARI DISTRICT TAMILNADU, INDIA - 629 003

**Bro. A. RUBAN**
JOINT SECRETARY
PHONE : +91 98400 91423
ADDR : NO. 16, 1ST STREET, SUBRAMANIPURAM, KOLATHUR, CHENNAI, TAMILNADU, INDIA - 600 099

**Bro. A. INNASIMUTHU**
TREASURER
PHONE : +91 98430 81234
ADDR : 3/1 KIRUBA ILLAM, SENIYAKUDI STREET, WATRAP, VIRUDHUNAGAR, TAMILNADU, INDIA - 626 132

**SENIOR MINISTER**
Pr. J. MATHEWS
Pr. J. J. LAZAR

**MEMBERS**
Pr. Y. Thaaveethu
Pr. Y. Babu Rajan
Pr. Baby Thomas
Pr. T. Christudhas
Pr. P. G. Roy
Pr. Jeyabalan J Devapitchai
Pr. Victor Joseph
Pr. Mariya Susai
Pr. D. Christudas
Pr. M. S. John Rathina Singh
Pr. G. George Ananth
Pr. Johnson. P. Daniel
Pr. Solomon Kennedy
Pr. Thomson Mathews
Pr. David Durai
Br. Enose
Br. Rajarethinam
Br. P. Simson
Br. B. Samson
Br. Raja Kani
Br. Sushil Kumar Mathews
Br. Gurumaran
Br. C. Jaya Zeba
Br. C. Eliza Darving Das
Br. B. Jenkins Bright
Br. M. John Moses Dayan
Br. John Chelliah Selvaraj
Br. Robert Vincent
Br. T. Katerasan

www.ipctn.in


TNS25-29/260709055 Date: 09/07/2026

### கர்த்தருக்கு ஸ்தோத்திரம்
## இந்தியா பெந்தெகோஸ்தே தேவ சபை, தமிழ்நாடு மாநில செயற்குழு கூடுகை - 19/06/2026

2026-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 19-ஆம் தேதி காலை 10 மணிக்கு திருமங்கலம் IPC தலைமையகத்தில் வைத்து நடைபெற்ற செயற்குழு கூடுகை மாநில தலைவர் பாஸ்டர். கிங்ஸ்லி செல்லன் அவர்கள் தலைமையில், பாஸ்டர் தாவீது அவர்கள் ஜெபிக்க கூட்டம் இனிதே துவங்கியது. பின்பு மாநில மூத்த போதகரான பாஸ்டர் J. J. லாசர் அவர்கள் தன் காலங்களில் ஏற்பட்ட ஊழிய அனுபவங்கள் குறித்தும், மாநில ஊழியங்களுக்கு முன்காலத்தில் உதவியவர்கள் குறித்தும், தொடர்ந்து மாநில ஊழியங்களுக்கு உதவுபவர்கள் தேவை என்றும் வலியுறுத்திப் பேசினார்கள்.

அதனைத் தொடர்ந்து மாநில செயலாளர் பாஸ்டர் S. சாலமோன் அவர்கள் 18/03 & 24/03/2026 அன்று நடைபெற்ற செயற்குழு கூடுகையின் அறிக்கையை (Minutes) வாசித்துச் சமர்ப்பி-த்தார்கள். அதைப் பாஸ்டர் தாம்சன் அவர்கள் முன்மொழிய, பாஸ்டர். கிறிஸ்துதாஸ் அவர்கள் வழிமொழிய, திருத்தமில்லாமல் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

### இரங்கல் தீர்மானம்

மாநில தலைவர் அவர்கள் அமெரிக்க ஐக்கிய நாட்டில் நியூஜெர்சியில் கர்த்தருக்குள் நித்திரையடைந்த Bro. Robertson அவர்களை குறித்து செயற்குழுவில் அறிவித்தார்கள். தொடர்ந்து முன்னாள் தலைவரும் மூத்த போதகருமான பாஸ்டர் J. மேத்யூஸ் அவர்கள் Bro. ராபர்ட்சன் அவர்களைக் குறித்தும், அவர்களை முதன்முதலில் சந்தித்ததைக் குறித்தும் செயற்குழுவில் பகிர்ந்து கொண்டார்கள். மேலும் நமது மாநில தலைமையக வளாகத்தில் வேதாகமக் கல்லூரிக்கென கட்டப்பட்டுள்ள ராபர்ட்சன் (Robertson) Block கட்டிடத்தையும், முதியோர் இல்லம் (Old Age Home) கட்டுவதற்கும், தமிழ்நாடு ஊழியத்தில் பல சபைகள் கட்டுவதற்கும் உதவி செய்தார்கள் என்பதைக் குறித்துத் தெரிவித்தார்கள்.

மேலும் மாநில தலைவர் அவர்கள் திண்டுக்கல் பகுதியில் கர்த்தருக்குள் நித்திரையடைந்த T. J. John அவர்கள் துணைவியார் திருமதி. சாராமாஜான் கர்த்தருக்குள் நித்திரையடைந்ததைக் குறித்து செயற்குழுவில் அறிவித்தார். தொடர்ந்து பாஸ்டர் J. மேத்யூஸ் அவர்கள் இரண்டு குடும்பத்திற்காகவும் ஜெபித்தார்கள்.

### வரவு செலவு கணக்குகள் சமர்ப்பிக்கப்பட்டது

மாநில பொருளாளர் Bro. இன்னாசிமுத்து அவர்கள் மார்ச், ஏப்ரல், மே ஆகிய மூன்று

மாதங்களுக்கான வரவு செலவுக் கணக்குகளை வாசித்துச் சமர்ப்பித்தார்கள்; அது செயற்குழுவில் ஏகமனதாய் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

## அடையாள அட்டை வழங்குவது சம்பந்தமாக

மாநில நிர்வாகத்திற்குட்பட்ட அனைத்துப் போதகர்களுக்கும் அடையாள அட்டை வழங்குவதைக் குறித்து விவாதிக்கப்பட்டது. அதன்பேரில் https://ipctn.in/id-card-application-form/ என்கிற வலைத்தளத்தில் உள்ள ID Card விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்தோ அல்லது விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்தோ, உங்கள் சென்டர் போதகரின் ஒப்புதலோடு July 20-ஆம் தேதிக்குள் சமர்ப்பிக்கும்படியும் தீர்மானிக்கப்பட்டது. மேலும் விண்ணப்பதாரரின் அனைத்துத் தகவல்களும் கிளவுட் ஸ்டோரேஜில் (Cloud Storage) சேமிக்கவும், நமது மாநில தலைமையகத்தில் ஒவ்வொரு போதகருக்கும் தனித்தனி கோப்புகள் (Files) உருவாக்கிப் பாதுகாக்கப்படவும், நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை சான்றுகள் புதுப்பிக்கப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் ஐடி கார்டு (ID Card) வழங்கும்போதே அதற்கான உரிமச் சான்றிதழ் (சர்ச் லைசென்ஸ்) வழங்கவும், அச்சான்றிதழ் ஒவ்வொரு சபையிலும் விசுவாசிகள் பார்வையில் வைக்கப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் ஒவ்வொரு சென்டர்களிலும் சென்டர்களுக்கான அங்கீகாரக் கடிதம் (Center/Mission Area Authorisation Letter) புதுப்பித்துக் கொள்ள வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. மேலும் ஐபிசி தமிழ்நாடு செயற்குழுவால் வழங்கப்படும் ஐடி கார்டு அல்லாமல், ஐபிசி பெயரில் வேறு எந்தப் போலியான அடையாள அட்டை வைத்திருந்தாலும் அந்த ஊழியர் மேல் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று தீர்மானிக்கப்பட்டது.

நமது மாநில தலைமையக வளாகத்தில் முழுநேர செக்யூரிட்டி (Security) பணி செய்ய CSF என்ற நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டு, 24 மணி நேர செக்யூரிட்டிக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் ஒரு போதகர் குடும்பம் வளாகத்தில் தங்க வைக்கப்பட வேண்டும் என்றும், அவர்கள் மூலம் சுற்றியுள்ள கிராமங்கள் சந்திக்கப்பட வேண்டும் எனவும், வளாகத்தில் ஜெபங்களும் ஆராதனைகளும் நடத்தப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் PYPA மூலம் வளாகத்தில் மரங்கள் நடுவதற்காக அனுமதி வழங்கத் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் கல்லறைத் தோட்டம் வரை சாலை உருவாக்க வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

## 2027 கன்வென்ஷன் சம்பந்தமாக

- 2027-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 13-ஆம் தேதி முதல் 17-ஆம் தேதி வரை உள்ள நாட்களில் மாநில கன்வென்ஷன் நடத்துவது எனவும், 13-ஆம் தேதி புதன்கிழமை காலையில் போதகர் கருத்தரங்கு நடத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

- 14-ஆம் தேதி வியாழக்கிழமை காலையில் பெண்கள் கருத்தரங்கு, 15-ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலையில் வாலிபர் கருத்தரங்கும் மதியம் ஞாயிறு பள்ளி ஆண்டு விழாவும், 16-ஆம் தேதி காலையில் பொது உபவாச ஜெபமும், 17-ஆம் தேதி ஞாயிறு காலை பொது ஆராதனையும், புதன், வியாழன், வெள்ளி ஆகிய நாட்களில் மாலை பொதுக் கூட்டங்களும் நடைபெறும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

- மேலும் இக்கூடுகையில் மாநிலத்தில் உள்ள அனைத்துப் போதகர்களும் போதகர் கருத்தரங்கு முதலே எல்லாக் கூடுகைகளிலும் கண்டிப்பாகக் கலந்து கொள்ள வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

## முதியோர் இல்லம் சம்பந்தமாக

நமது மாநில Charity Board மூலம் ஏற்கனவே கட்டப்பட்டிருக்கிற Old Age Home கட்டிடத்தில் முதியோர் இல்லம் உடனே துவங்குவதற்கான ஆவென செய்யும்படி Bro. Zeba அவர்களுக்கு அங்கீகாரம் வழங்கித் தீர்மானிக்கப்பட்டது.

## ஐ பி சி டோல்கேட் திருச்சி சபை சம்பந்தமாக

திருச்சி ஐபிசி டோல்கேட் சபையில் புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ள போதகர் ஜோசப் அவர்கள் கொடுத்த விண்ணப்பத்தின் பேரில், சபை வருமானத்தோடு சபைக்கு முன் செயல்பட்டு வருகிற பைக் ஸ்டாண்ட் (Bike Stand) வாடகைத் தொகையில் உள்ள ஒரு பங்கு வழங்க வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

## பிரதர் சிம்சோன் அவர்கள் கடிதம் சம்பந்தமாக

மதுரை சென்டருக்கு உட்பட்ட சகோதரர் சிம்சோன் அவர்கள் மாநில செயற்குழு அங்கத்தினராய்ச் செயல்பட்டு வருகிறார்கள். தற்போது ஏற்பட்ட சில மனவருத்தத்தின் பேரில் மாநில செயற்குழு அங்கத்தினரிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளக் கடிதம் கொடுத்திருந்தார். பின் செயற்குழுவிற்குத் தான் சில மன அழுத்தங்களால் அக்கடிதம் எழுதியதாக மன்னிப்புக் கடிதமும் கொடுத்திருந்தார். மாநில செயற்குழு அவரது கடிதத்தை ஏற்றுக்கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டது.

## குருமன்றத் தீர்மானங்கள் சம்பந்தமாக

16/06/2026 மாலை 7:30 மணி அளவில் தலைமையகத்தில் வைத்து நடைபெற்ற குருமன்றதின் தீர்மானங்கள், 17/06/2026 அன்று நடந்த செயற்குழுவில் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது அத்தீர்மானங்கள் பின்வருமாறு:

### 1. ஊழியர்கள் இடமாற்றம் சம்பந்தமாக:

நமது மாநிலத்திற்கு உட்பட்ட சபைகளில் ஊழியர்கள் இடமாற்றம் செய்யப்படும் போது சில இடர்பாடுகளை நாம் சந்திப்பதால், நமது சட்டப் புத்தகத்தில் குறிக்கப்பட்டுள்ளபடியே இடமாற்றங்கள் அந்தந்த மாவட்ட குருமன்றங்களில் தீர்மானிக்கப்பட்டு மாநில குருமன்றத்தின் பரிசீலனைக்கு அனுப்பப்பட வேண்டும். மாநில குருமன்றம் பரிசீலனை செய்து இடமாற்றக் கடிதம் கொடுக்கபடவேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

### 2. இரண்டு சென்டருக்கான இடமாற்றங்கள்:

இரண்டு சென்டருக்குட்பட்ட இடமாற்றங்கள் அந்தந்த சென்டருக்குள் தீர்மானித்து, சென்டரின் NOC கடிதத்துடன் மாநில குருமன்றத்திற்கு அனுப்ப வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

### 3. இடமாற்றங்களில் ஒத்துழைக்காத ஊழியர்கள் சம்பந்தமாக:

முந்தின செயற்குழு தீர்மானப்படி இடமாற்றம் செய்யப்பட்ட ஊழியர்களில் சிலர் சபைகளில் விசுவாசிகளைப் பிரித்து, சபைக்குச் சொந்தமான பொருட்களையும் எடுத்துக்கொண்டு சபையை விட்டு வெளியேறி உள்ளனர். ஆகவே வத்ராப் சென்டரில் ஊழியம் செய்து வந்த பாஸ்டர் சாமுவேல். C, சத்யராஜ், பெஞ்சமின் பிரபு, மேலும் சென்னை CTK சென்டரில் ஊழியம் செய்து வந்த ஜான் செரிலோ ஆகியோர் மீது மாநில செயற்குழு தீர்மானப்படி தங்கள் போதகர் அங்கீகாரமும், ஐபிசி ஊழியர் என்கிற அங்கீகாரமும் ரத்து செய்யப்படத் தீர்மானிக்கப்பட்டது. மேலும் இவ்விதம் சபையின் பொருட்களைத் திருடிச் செல்லும் ஊழியர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

### 4. புது சென்டர்கள் விண்ணப்பங்கள் சம்பந்தமாக:

ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்டுச் செயல்பட்டு வந்த இடைக்கோடு சென்டர் தலைவர், செயலாளர் ஆகிய இருவரும் தங்களுக்கு இடைக்கோடு சென்டரைப் பிரித்து இரண்டு சென்டராகக் கொடுக்கப்பட வேண்டும் எனக் கூறியுள்ள நிலையில், நமது சட்டப் புத்தகத்தின் விதிகளின்படி தங்கள் சென்டர்களில் உள்ள முழு ஆவணங்களையும் சமர்ப்பிப்பதன் பேரில் அதற்கான தீர்மானம் நிறைவேற்றலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது. மேலும் சென்னை தாம்பரத்தில் பாஸ்டர் ஜான்சன் அவர்கள் தலைமையில் இயங்கி வந்த சென்டர் தற்போது இயங்காத பட்சத்தில், பாஸ்டர் ஜான்சன் அவர்கள் கொடுத்த விண்ணப்பத்திற்கும் மேற்குறிப்பிட்டபடி பதில் கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டது.

### 5. பாஸ்டர் பிரகாஷ் வாழத்தோப்பு அவர்கள் சம்பந்தமாக:

பாஸ்டர் பிரகாஷ் வாழத்தோப்பு அவர்கள் திருச்சி சபையில் இருந்து மாநில செயற்குழுவால் இடைக்காலத் தகுதி நீக்கம் செய்யப்பட்டு சபையின் பொறுப்பில் இருந்து விடுவிக்கப்பட்டு அறிவிக்கப்பட்டதின் பேரில், மாநில குருமன்றம் அவரை நேரில் அழைத்துப் பேசியதன் அடிப்படையில் அவரது இடைக்காலத் தகுதி நீக்கம் திரும்பப் பெறப்பட்டது. அவருக்குத் தற்போது கொடுப்பதற்குச் சபை இல்லாதபடியால், தகுதியான சபைகள் காலியாகும் போது சபை கொடுக்கப்பட வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

### 6. அம்சி சென்டர் விண்ணப்பம் சம்பந்தமாக:

அம்சி சென்டரில் ஊழியம் செய்து வந்த பாஸ்டர் சுந்தர்ராஜ், பாஸ்டர் ஜெகன் அலெக்சாண்டர் ஆகியோர் ஐபிசி அம்சி சென்டரோடு இணைந்து செயல்படாமல், தன்னிச்சையாக வேறு ஸ்தாபனங்களோடு இணைந்து செயல்படுவதால் ஐபிசி சார்பில் கொடுக்கப்பட்டுள்ள அடையாள அட்டை மற்றும் அனைத்து ஆவணங்களையும் ரத்து செய்யும்படி தீர்மானிக்கப்பட்டது.

இறுதியில் பாஸ்டர் J. மேத்யூஸ் அவர்கள் ஜெபித்து ஆசீர்வாதம் கூற செயற்குழு இனிதே நிறைவு பெற்றது.

உங்கள் சேவைக்காக,

Pr. S. சாலமோன்
மாநிலச் செயலாளர், ஐபிசி தமிழ்நாடு
secretary@ipctn.in | +91 94431 95225